"டாலி பில்லி லல்லு" - இது தான் நான் முதல்ல படிச்ச தொடர்கதை. சிறுவர் மலர் ல படக்கதையா வந்துச்சி. என் வாசிப்பின் ஆரம்பம்னு சொல்லலாம். கடலை சுருட்டி தந்த பேப்பர்லயும் ஏதாவது கதை இருக்கானு தேடுற ஆள் நானு. அப்புறம் 9th படிக்கும்போது பக்கத்துல உட்கார்ந்த பொண்ணு ஏத்திவிட்ட பைத்தியம் தான் 'பொன்னியின் செல்வன்". என்ன இப்படி சொல்றேன்னு நினைக்கிறீங்களா? அப்படிதான் சுத்திட்டு இருந்தேன். அத பத்தியே வீட்ல பேசிட்டு இருக்கும் போது பாட்டி library la எடுத்து கொடுத்து படி நல்லாருக்கும் னு சொன்னாங்க. அப்பப்பா என்ன ஒரு feel. எனக்கு வாசிப்பு gene ல இருக்குனு அப்போ தான் தெரிச்சது. ஏன்னா பாட்டியும் நிறைய படிப்பாங்க. சோறு தண்ணி இல்லாமலாம் படிச்சேன் பா. வீட்ல திட்டுனாலும் கேட்டுக்கல. நமக்கு ஹீரோனா அதுலேர்ந்து வந்தியதேவன். பிடரி மயிர் சிலுப்பிகிட்டு அப்படியே குதிரை மேல வீரநாராயண ஏரிக்கு வர்ற scene ல போதுமே நம்ம கண்ணுல வர Super heroக்கு match ஆக. யார் கேட்டாலும் இல்ல பாத்தாலும் புலம்பிட்டே இருப்பேன் அந்த காலத்துக்கு போகணும் னு. நமக்கு குடந்தை தான் சொந்த ஊர் இத சுத்தி உள்ள ஊர் கதைல வரும்போதுலாம் நானே அங்க travel பண்ண feel வரும். 11th அப்போ எனக்கே எனக்குனு புத்தகம் வாங்கி குடுத்தாங்க பாட்டி. 2nd time படிக்கும் போதும் முதல் தடவ படிக்கிற feel. புக்கல மறச்சி வச்சி room ல தெரியாம படிப்பேன். ஏன்னா school subject படிக்கல னு வீட்ல படிக்க விடமாட்டாங்க. பெரிய கோவில்ல lovers போனா ~~[illegible]~~ சண்டை வரும்னு புரளி இருக்கு. நாமலாம் கோவில் கட்டுனவரோட மாப்பிள்ளைய விழுந்து விழுந்து காதலிச்சோம்♥

நமக்குள்ளேயும் சந்திரமுகிய கண்டுபிடிச்சோம்பா. நானெல்லாம்
எத்தனைதடவ என்னையே "குந்தவை"யா feel Panirken
தெரியுமா. படம் மட்டும் இல்ல உணர்வு பூர்வமான
எழுத்து கூட நம் கண்கள் ஈரம் சுரக்க வைக்கும்னு தெரிய
வச்சதும் பொன்னியின் செல்வன் climax than. இதுலேர்ந்து
வாசிப்பு என்னோட "emotion"னையே மாறிடுச்சு. தொடர்ந்து
கல்கியோட சிவகாமி சபதம், பார்த்திபன் கனவு எல்லாம் நான்
வாழ்ந்துருக்கேன். அனுஷா எழுதிய "காவிரி மைந்தன்"
பொன்னியின் செல்வனோட sequel ஆ விரும்பி படிச்சேன்.
சாண்டில்யனோட "யவனராணி" நான் படிச்ச college இடத்துல
நடந்த போர் (வெண்ணி பறந்தலை). எல்லாமே என்ன சுத்தி
நடந்துருக்கற மாதிரி feel. இப்படி சரித்திர கதை படிச்சிட்டு
இருந்த என்னை social novels பக்கம் திருப்புனது "ரமணிம்மா".
"ஆசை ஆசை ஆசை" - நான் படித்த முதல் நாவல். என்ன ஒரு
feel good நாவல் அவங்களோடது. கிட்டதட்ட 100 நாவல்கள்
அவங்களோடது படிச்சிருக்கேன். எனக்கு ஒரு முறையாவது
அவங்கள பாக்கனும்னு ரொம்ப ஆசை. ஆங்கில ஆசிரியர்கள்
Jane Austin - Pride and Prejudice, Paulo coelho - The Alchemist
chetan Bhagat, Sidney Sheldon லாம் ரொம்ப பிடிக்கும். அதும்
Sidney Sheldon ரொம்ப பிடிக்க காரணம் women centric novels
தான். "Tell me your dreams" அட நம்ப அந்நியன் இதோட
தழுவல் தான் பா. online படிக்க ஆரம்பித்தது "தேனு"வின்
"இருள் மறைத்த நிழல்". அம்மாவே பைத்தியமா படிப்பேன் இப்போ
கடல் மாதிரி இவ்வளவு online stories கிடைக்கும் போது
சலங்கை கட்டுன மாதிரி தான். வேலை, Hostel nu தனிமையா
இருக்கும்போது எனக்கு இன்னொரு friend na Novels
தான். சிரிக்க வச்சு, அழ வச்சு, சிந்திக்க வச்சு இப்படி complete
emotion packages. நான் தேடி தேடி படிக்கிறது சக்தி திருவை,
ஸ்ரீகலா, மோனிஷா, அகிலா கண்ணன் இப்படி பட்டியல் நீளும்.

இப்போ 100% fun guarantee னு அடிச்சி சொல்ற மாதிரி நாவல்கள் எழுதும் வ.நிஷா என்னோட மிகப்பெரிய favourite ஆகிட்டாங்க. எப்போ ரொம்ப சோகமா feel பண்றேனோ அப்போ இவங்க novel தா சிரிக்க வச்சுரும். வாழ்த்துகள் சிஸ்.

கதைய கதையா மட்டும் பார்க்க வைக்காம நம்ம உணர்வுகளையும் தொடுற அளவுக்கு எழுதுற எல்லா எழுத்தாளர்களுக்கும் மிகப்பெரிய சல்யூட். எழுதிட்டே இருங்க எங்க இதயத்தை திருடிட்டே இருங்க.

---